சுருக்கம்

உயர்கல்வித் துறை – 2021–22 ஆம் ஆண்டில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பு – உயர்கல்வித் துறையின் கீழுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் பெறப்பட்ட முனைவர் பட்ட ஆய்வுச் சுருக்கம் மற்றும் ஆய்வுத் தொகுப்புகளை தமிழில் தொகுத்து, தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் வாயிலாக இணையத்தில் வெளியிடுதல் – அறிவுறுத்தல்கள் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வித் (கே2) துறை

அரசாணை (நிலை) எண். 5

நாள்: 07.01.2022.
பிலவ, மார்கழி 23
திருவள்ளுவராண்டு, 2052
படிக்கப்பட்டவை:

1. 2021–22 ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு எண். 13, நாள் 31.08.2021.
2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித எண். 9418/வ.செ.2/2021, நாள் 20.10.2021.

-----

**ஆணை:**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 31.08.2021 அன்று நடைபெற்ற தமிழ் வளர்ச்சித் துறையின் 2021–22–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை எண். 46–இல், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு (அறிவிப்பு எண்.13) வெளியிடப்பட்டது:–

"அனைத்து பல்கலைக்கழகங்களும் அனைத்துத் துறைகளின் முனைவர் பட்ட ஆய்வுச் சுருக்கங்களைத் தமிழில் தொகுத்து வெளியிடுவதோடு, இனிவரும் காலங்களில் முனைவர் பட்ட ஆய்வேடு அளிக்கப்படும்போது, அவ்வாய்வேட்டின் ஒரு பகுதியாக ஆய்வுச் சுருக்கமும், கலைச் சொல் பட்டியலும் இடம் பெறச் செய்யவேண்டும். இனிவரும் ஆண்டுகளில் ஆண்டுதோறும் பல்கலைக்கழகங்கள் இத்தகைய தமிழ் ஆய்வுச் சுருக்கம் மற்றும் ஆய்வுத் தொகுப்பைத் தமிழ் இணையக் கல்விக்கழகத்திற்கு மென் நகலியாக (Soft copy –Ms word format) அனுப்பி வைக்க வேண்டுமென ஆணையிடப்படும்."

...2

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பாக மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ் வளர்ச்சி இயக்குநர், அனைத்து பல்கலைக்கழகங்களிலும் முனைவர் பட்ட ஆய்வேடு அளிப்பதற்கான பொதுவான நடைமுறையில் உள்ள விதிமுறைகள் குறித்து தெரிவித்துள்ளதுடன், முனைவர் பட்ட ஆய்வின் பொருண்மையை அனைவரும் அறிந்துகொள்ளும் வகையிலும் பயன்பெறும் நோக்கத்திலும் இணையத்தில் வெளியிடுவது இத்திட்டத்தின் நோக்கமென்றும் குறிப்பிட்டு, இதுதொடர்பாக விரிவான கருத்துருவினை அனுப்பியுள்ளார்.

3. மேற்காணும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் அறிவிப்பினை செயல்படுத்த இத்துறை முடிவு செய்து, தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வுசெய்தது. அதனடிப்படையில், உயர்கல்வித் துறையின் கீழுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களும் முனைவர் பட்ட ஆய்வாளர்கள் தங்களது ஆய்வேடுகளுக்கான ஆய்வுச்சுருக்கத்தையும், அவ்வாய்வில் இடம்பெற்றுள்ள கலைச்சொற்களின் பட்டியலையும் தமிழ் இணையக் கல்விக்கழகத்துக்கு அளித்து, அதற்காக தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் அளிக்கப்படும் சான்றினை பெற்று இணைக்கப்பட வேண்டும் என்ற விதிமுறையை பல்கலைக்கழகங்களுக்கான முனைவர் பட்ட ஆய்வேடு அளிப்பதற்கான பொதுவான விதிமுறைகளுடன் சேர்க்க வேண்டும் என அனைத்து பல்கலைக்கழக பதிவாளர்களையும் அரசு அறிவுறுத்துகிறது.

4. இவ்வரசாணை, ஆணை வெளியிடப்படும் நாள் முதல் செயல்பாட்டிற்கு வரும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா. கார்த்திகேயன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
உயர்கல்வித் துறையின் கீழுள்ள அனைத்து பல்கலைக்கழக பதிவாளர்கள்
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை–25.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, சென்னை–9.
மாநில (தணிக்கை–1) கணக்காயர், சென்னை–18.
உள்ளுறை கணக்காயர், மாநில கணக்காயர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.

<u>நகல்:</u>
உயர்கல்வித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
தொழில் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை–9.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளரின் தனிச் செயலர், சென்னை–9.
இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

07/01/2022
பிரிவு அலுவலர்